# அன்னைக்குக் கரம்  குவிப்போம்

அன்னைக்குக் கரம்குவிப்போம்
அவள் அன்பைப் பாடிடுவோம் - ( 2 )

**1)**
கன்னிமையில் இறைவன்
உருக் கொடுத்தார் - அந்த
முன்னவனின் அன்னை எனத் திகழ்ந்தாள்
மனுக்குலம் வாழ்ந்திட
பாதை படைத்தாள்
தினம் அவள் புகளினைப் பாடிடுவோம் - 2

**2)**
பாவமதால் மனிதன்
அருள் இழந்தான் - அன்று
பாசமதால் அன்னை கருணை கொண்டாள்
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார்
பாவினில் அவள் புகழ் பாடிடுவோம் - 2